ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2366/15 - 2024 ජනවාරි මස 10 වැනි බදාදා - 2024.01.10

2366/15 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/BD/LND/3/5/29.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/9/2013/WS/29.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் கிளேன் எல்பின் தோட்ட (80-H) கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வேதிகுண கிராமத்தில் வேவெஸ்ஸ வத்த, குறுது கெலேவத்த என்ற இடத்திற்கு நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ. 170, மேலதிக இல. 75, தாள் இல. 70 உடைய மற்றும் 2020.07.07 ஆந் திகதி ஆரம்ப வரைபடத்தில் 0.1012 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் காணப்படும் காணித் துண்டு மற்றும் எல்லைகளின் விபரங்கள் :

**01. துண்டு இல. 1476 - காணியின் பெயர் : வேவெஸ்ஸ வத்த, குறுது கெலேவத்த; விபரம் : தோட்டம், 10 - 20 வருடங்கள் பழமையான டர்பன் டயின் பயிர்ச்செய்கை மற்றும் நீர்தாங்கி ஒன்றுள்ளது; உரிமை கோருவோர் : வரையறுக்கப்பட்ட பலங்கொட பெருந்தோட்ட கம்பனி; விஸ்தீரணம் : 0.1012 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 80A; கிழக்கு : துண்டு இல. 80A; தெற்கு : துண்டு இல. 80A; மேற்கு : துண்டு இல. 80A.

பழைய காணித்துண்டுகளுக்கான தொடர்பு : இ.கி.வ. 178 துண்டு (துண்டுகள்) இல. 80A (உ.வ. 265209)

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு பதுளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துஷாரி அனுராதா நாணாயக்கார,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பதுளை,
2024, சனவரி 05.

EOG 01 - 0082

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.